

▶▶ மதிஒளி சரஸ்வதியின் பிறந்த நாளையொட்டி புதுச்சேரி நந்தலாலா சேவா சமதி அறக்கட்டளை சார்பில் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையை சிறப்பு விருந்தினர் டிடிகே பிரெஸ்டீஜ் நிறுவன இயக்குநர் சங்கரன் வழங்கினார். அருகில் மதிஒளி அறக்கட்டளை நிர்வாகிகள்.

படம்.எம்.சாம்ராஜ்

### நந்தலாலா சேவா சமிதி அறக்கட்டளை சார்பில்

# மதிஒளி சரஸ்வதியின் பிறந்த நாள் விழா

● டிடிகே பிரெஸ்டீஜ் நிறுவன இயக்குநர் சங்கரன் உள்ளிட்டோர் பங்கேற்பு

**புதுச்சேரி**

'நந்தலாலா சேவா சமிதி' அறக்கட்டளை சார்பில், அதன் நிறுவனர் பூஜ்யஸ்ரீ மதிஒளி சரஸ்வதியின் 78வது பிறந்த நாள் விழா மூலக்குளம் சிங்கப்பூர் அவென்யூவில் உள்ள மதிஒளியன் அரிச்சுவடி பொது நூலகத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவில் மதிஒளி சரஸ்வதியின் இலக்கிய படைப்புகள் குறித்து டிடிகே பிரெஸ்டீஜ் நிறுவன இயக்குநர் சங்கரன் பங்கேற்று பேசியதாவது:

மதிஒளி தன்னுடைய 13 வயதில் இருந்து கடைசி மூச்சு இருக்கும் வரை பொதுமக்களுக்காக உழைத்தார். அவருடைய வரப்பிரசாதம் தான் மதிஒளி அரிச்சுவடி பொது நூலகம்.

இதுவும் ஒரு கோயில்தான். மதிஒளி எழுதியிருப்பது இலக்கியமல்ல இலக்கணம்.

மதிஒளி கடந்த 50 ஆண்டுகளில் ஏராளமான புத்தகங்கள் எழுதியுள்ளார். அந்த புத்தகங்களை படித்து வளர்ந்தவனில் நானும் ஒருவன். அவர் எழுதிய புத்தகங்களில் கூகுள் போன்றவைகளில் நல்லது, தீயது இரண்டுமே இருக்கும். ஆனால் அரிச்சுவடியில் நல்ல விஷயங்களை மட்டுமே படிக்க முடியும். ஒவ்வொருவரும் இதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**உயர்ந்த தத்துவம்**

மதிஒளி குறிப்பிட்ட முக்கிமான ஒன்று, 'என்னுடைய வாழ்க்கையில் இன்று ஒருநாள் மட்டும் நான் கோபப்பட மாட்டேன், கவலை படமாட்டேன், நன்றியுடையவனாக இருப்பேன், எல்லோரையும் நேசிப்பேன், ஒற்றுமையுடன் இருப்பேன்' இது ஒரு உயர்ந்த தத்துவம். இந்த ஒழுக்க முறைகளை நாம் பின்பற்றினால் நம்முடைய வாழ்க்கை மேம்படும்" என்றார்.

இதையடுத்து செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டு முறை பற்றி தொழில் வல்லுநர்கள் ராஜா விஷ்ணு பிரபாகர், கோகுல் இளங்கோ ஆகியோர் செயல் விளக்கம் மூலம் எடுத்துரைத்தனர்.

நிதி, சட்டம் மற்றும் மனித வளத் துறைகளில் உள்ள வேலை வாய்ப்புகள் பற்றி தொழில் வல்லுநர்கள் கனகதாரா ஸ்ரீனிவாசன், ஆதித்யா சங்கர் ஆகியோர் உரையாற்றினர்.

**நலத்திட்ட உதவிகள்**

விழாவில், நந்தலாலா சேவா சமிதி அறக்கட்டளை மூலம், புதுச்சேரியில் உள்ள 12 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த 51 மாணவ, மாணவிகளுக்கு மதிஒளியின் பெற்றோர் ஜெயலட்சுமி - ராமச்சந்திரன் பெயரில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

புதுச்சேரியில் உள்ள சத்யா சிறப்புப் பள்ளிக்கு ரூ.50 ஆயிரம் மதிப்பிலான குடிநீர் வடிகட்டி (வாட்டர் ஃபில்டர்) வழங்கப்பட்டது.

தொடர்ந்து மதிஒளி சரஸ்வதியின் கட்டுரைகள் அடங்கிய 'அம்ருத குடம்' என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. புத்தகத்தை டிடிகே பிரெஸ்டீஜ் நிறுவன இயக்குநர் சங்கரன் வெளியிட, அதனை சிவசங்கர், நீலிமா, ஆடிட்டர் வைத்திய நாதன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

விழாவில் நந்தலாலா சேவா சமிதி அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர்கள், பெற்றோர் என ஏராளமானோர் பங்கேற்றனர்.●